260

# CAMPAIGNING WITH HANDMADE GREETING CARDS FOR THE AWARENESS RAISING ON HERBAL PLANTS IN THE DIVISIONAL SECRETARIAT OF WARAKAPOLA :

# A PARTICIPATORY ART ACTION STUDY

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
07 JAN 2014
VANTHARUMOOLAI,
CHENKALADY.

MOHAMED MAKEEN AYSHA MASEERA

REG.NO :- EU/IS/2007/AC/208

INDEX NO :- CS 3208

A Dissertation submitted to the faculty of Arts and culture, Eastern University, Sri Lanka as a partial fulfillment for requirement of the degree of Bachelor of Arts in Fine Arts.

DEPARTMENT OF FINE ARTS,

FACULTY OF ARTS AND CULTURE,

EASTERN UNIVERSITY,

SRI LANKA.

2013

FAC260
Project Report
Library - EUSL

EASTERN UNIVERSITY SRI LANKA
PER ARDUA AD SCIENTIAM

PROCESSED
Main Library, EUSL

# முன்னுரை

## 1. தலைப்பு

அச்சுறுத்தலுக்குள்ளாகி வருகின்ற மூலிகைத் தாவரங்களை இனங்கண்டு, வாழ்த்து அட்டைகள் உருவாக்க, பரவலாக்க கலை செயல்வாதம் ஊடாக வெளிப்படுத்தல்- ஓர் பங்குகொள் செயற்பாட்டு ஆய்வு (வறகாப்பொளைப் பிரதேசத்தை மையப்படுத்தியது)

## 2. அறிமுகம்

உலகில் 1/3 பகுதியாக விளங்கும் இயற்கை தாவரங்கள் நமது சமூக பொருளாதார மற்றும் சுற்றுச் சூழலுக்கு விலைமதிப்பற்ற நன்மைகளை வழங்குகின்றன. ஆதிகாலம் தொட்டே இயற்கைத் தாவரங்களின் தேவை மக்களுக்கு இருந்து வருகின்றது. குடியிருப்புக்கள் அமைக்கவும் தளபாடங்களுக்காகவும் பயிர்ச்செய்கை கைத்தொழில்கள் என்பவற்றுக்குத் தேவையான கருவிகள் செய்யவும் நெருப்புண்டாக்கவும் மூலிகைகளைப் பெற்றுக்கொள்ளவும் என ஏராளமான விடயங்களுக்கு தாவரங்கள் இன்றியமையாதவையாக இருந்தன.

இவற்றுள் குறிப்பாக மருந்து மூலிகைகளுக்காக இயற்கை தாவரங்களை உபயோகிக்கும் முறையானது ஆரம்ப காலம் தொடக்கம் இருந்து வருகின்றது. பாரம்பரிய மருத்துவ உபயோகத்திற்காக மொத்தம் 1414 தாவர இனங்கள் நிரற்படுத்தப்பட்டுள்ளன. இவற்றில் கூடுதலான இனங்கள் காடுகளிலேயே காணப்படுகின்றன. 50% மான கிராம மக்கள் இம்மருத்துவ தாவரங்களையே தமது தேவைக்கு பயன்படுத்துகின்றனர்.

சுமார் 200 மருத்துவ தாவர இனங்கள் பொதுவாக உபயோகிக்கப்படுகின்றன. இதனடிப்படையில் பாரம்பரிய மருத்துவ முறைகள்ான ஆயுர்வேதம் மற்றும் சித்த மருத்துவம் என்பன பெரும்பாலும் மூலிகைத் தாவரங்களையே (MEDICINAL PLANTS) அடிப்படையாகக் கொண்டுள்ளன.

இம்மருந்து மூலிகைகள் இன்றைய மருத்துவர்களினதும் விஞ்ஞானிகளினதும் கவனத்தை பெரிதும் ஈர்த்துள்ளன. இவர்கள் இம்மூலிகைகளை சேகரிப்பதிலும் அவற்றின் இயங்கு பொருளை (ACTIVE PRINCIPLE) கண்டறிந்துகொள்வதிலும் பேரார்வம் காட்டி வருகின்றனர்

.பல்வேறு நாடுகளில் பாரம்பரிய வைத்திய முறைகளால் நெடுங்காலமாக பயன்பட்டு வந்த மருந்து மூலிகைகள் கடுமையானதெனக் கருதப்படும் நோய்கள் சிலவற்றை குணப்படுத்தும் ஆற்றலுடையன என்பது நிரூபிக்கப்பட்டமையே அறிஞர்களின் இப்பேரார்வத்திற்கு

காரணமாகும். 4000 ஆண்டுகளுக்கு முன்பிருந்தே சீனாவின் பாரம்பரிய மருத்துவர்களால் ஆஸ்த்மா நோய்க்கெனப் பயன்படுத்தப்பட்டு வந்த 'மா-ஹீ-ஆங்' (Ma-Huang) எனும் மூலிகையிலிருந்து பிரித்தெடுக்கப்பட்ட இரசாயனப்பொருளே இன்று ஆஸ்த்மாவுக்கும் அதனையொத்த நோய்களுக்குமென மேலை நாட்டு மருத்துவர்களால் பரிந்துரைக்கப்படும் 'எ∴பெட்றின்' (Ephedrine) எனும் மருந்தாகும். புராதன ஆயர்வேத நூலோரால் பாம்புக்கடி உள்ளிட்ட அநேக நோய்களுக்கு மருந்தாகக் கூறப்பட்ட 'ஸர்ப்பகந்த' எனும் மூலிகையிலிருந்து பெறப்பட்டதே நவீன மருத்துவ முறையில் உயர் இரத்த அழுத்தம் உள்ளிட்ட இருதய நோய்களுக்கு மருந்தாக பயன்படும் 'ரிசோரீன்' (Resoricine) எனும் இரசாயனப்பொருளாகும்.

தென் அமெரிக்க பூர்வீக குடிகளால் பயன்படுத்தப்பட்ட 'சிங்கோனா' (Cinchona) மரத்திலிருந்து பெறப்பட்டதே மலேரியாக்காய்ச்சலுக்குக் கொடுக்கப்படும் 'குயீனைன்' மருந்தாகும். இன்று வள்ளிக் குடும்பத்துக்குரிய தாவரங்களில் இருந்து புற்று நோய் எதிர்ப்பு மருந்துகளுக்கு மூலப்பொருளாகப் பயன்படும் 'டையோ ஜெனின்' (Dioagenin) எனும் இரசாயனப் பொருளும் பட்டிப் பூவின் வேரிலிருந்து இருதய நோய்களுக்குப் பயன்படும் 'அஜ்மலிசீன்' (Ajmalicine) மருந்தும் அதன் தண்டு மற்றும் இலைகளிலிருந்து சிறுவர்களின் இரத்தப்புற்று நோய்க்கு மருந்தான 'லியுரோ கிரிஸ்டின்' (Leurocristine) எனும் பொருளும் பெறப்படுகின்றன. மடகஸ்காரில் காணப்படும் Catharanthus roseus எனுப்படும் rosy periwinkle மழைக்காட்டுத் தாவரமானது புற்று நோய்க்கு எதிரான ஒரு முக்கிய மருந்தாக உள்ளது. இத்தகைய அரிய மருந்துகளை, மூலிகைகள் கொண்டிருக்கும் உண்மை உறுதிப்படுத்தப்பட்டுள்ளமையாலேயே பெரும்பாலும் மூலிகைகளையே மருந்தாக பரிந்துரைக்கும் ஆயர்வேத மருத்துவ முறையும் அம்மருத்துவ முறையிற் கூறப்படும் மூலிகைகளும் நவீன மருத்துவர்களையும் விஞ்ஞானிகளையும் தம்பால் கவர்ந்துள்ளன. எனவே இத்தகைய அரிய மூலிகைத்தாவரங்கள் பாதுகாக்கப்பட வேண்டும்.

## 3. ஆய்வுப் பிரதேசம்

கேகாலை மாவட்டமானது பதினொரு பிரதேச செயலாளர் பிரிவுகளைக் கொண்டுள்ளது. இப்பிரதேசங்களுள் வறகாப்பொளைப் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதியே ஆய்வுப் பிரதேசமாக அமைகின்றது. இப்பிரதேசமானது 188.3 சதுர கிலோ மீற்றர் நிலப்பரப்பைக் கொண்டுள்ளது.

## 4. ஆய்வுப் பிரச்சினை

வறகாப்பொளைப் பிரதேசத்தில் மூலிகைத்தாவரங்கள் அருகி வருகின்றன. இதன் காரணமாக சூழலின் பசுமைத் தன்மை குறைவடைந்து செல்வது மாத்திரமன்றி அரிய பல மூலிகைகளும் இழக்கப்படுகின்றன.

## 5. ஆய்வு நோக்கம்

வறக்காப்பொளை பிரதேசத்தில் மூலிகைத்தாவரங்கள் எதிர்நோக்கியுள்ள சவால்களை இனங்கண்டு, அதனை வாழ்த்து அட்டை உருவாக்க, பரவலாக்க செயற்பாட்டிற்கூடாக வெளிப்படுத்தல்.

## 6. ஆய்வுக்கான தரவுகள்

- முதல் நிலைத்தரவு
- இரண்டாம் நிலைத்தரவு

## 7. ஆய்வு முறையியல்

- கள ஆய்வு
- பங்குகொள் ஆய்வு

## 8. அத்தியாய ஒழுங்கமைப்பு

அத்தியாயம் - 1

1. வறகாப்பொளைப் பிரதேச அறிமுகம்.

   1.1 வறக்காப்பொளை பிரதேசத்தின் அமைவிடம்

   1.2 நிர்வாகப் பிரிவுகள்

   1.3 காலநிலை

1.4 பயிர்ச்செய்கை

1.5 பொருளாதாரப் பின்னணி

1.6 நிலப் பயன்பாடு

1.7 சனத்தொகை

அத்தியாயம் - 2

2. மூலிகைத்தாவரங்களின் முக்கியத்துவம்

அத்தயாயம் - 3

3. ஆய்வுச் செயற்பாட்டின் படிமுறைகள்

3.1 மூலிகைத் தாவரங்களை இனங்காணல்.

3.2 வாழ்த்து அட்டைகள் உருவாக்கம்.

3.3 கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல்.

3.4 வாழ்த்து அட்டைகளை பரவலாக்கல்.

3.5 சிறுவர் விளையாட்டு

3.6 முதியவர்களின் கருத்துக்களைப் பெறல்

அத்தியாயம் - 4

4. வறகாப்பொளைப் பிரதேசத்தில் அருகிவரும் மூலிகைத்தாவரங்கள்

அத்தியாயம் - 5

5. முடிவுரை

# உள்ளடக்கம்

| விடயம் | பக்கம் |
|---|---|
| I. நன்றியுரை | i |
| II. முன்னுரை | ii-v |
| அத்தியாயம் ஒன்று | |
| 1, வறகாப்பொளைப் பிரதேச அறிமுகம். | 1-5 |
| 1.1 வறக்காப்பொளை பிரதேசத்தின் அமைவிடம் | |
| 1.2 நிர்வாகப் பிரிவுகள் | |
| 1.3 காலநிலை | |
| 1.4 பயிர்ச்செய்கை | |
| 1.5 பொருளாதாரப்பின்னணி | |
| 1.6 நிலப்பயன்பாடு | |
| 1.7 சனத்தொகை | |
| அத்தியாயம் இரண்டு | |
| 2. மூலிகைத்தாவரங்களின் முக்கியத்துவம். | 6-9 |
| அத்தயாயம் மூன்று | |
| 3. ஆய்வுச் செயற்பாட்டின் படிமுறைகள் | 10-33 |
| 3.1 மூலிகைத் தாவரங்களை இனங்காணல். | |
| 3.2 வாழ்த்து அட்டைகள் உருவாக்கம். | |
| 3.3 கண்காட்சிகளை ஒழுங்கு செய்தல். | |